I Additional District Court, Thoothukudi.

O.S.No. 85/2010 நாள் : 29.06.2026

பி.சா.1– திரு. சுப்பிரமணியன்.

குறுக்கு விசாரணை :–

வாதிகள் என் பெரியப்பா பிள்ளைகள். என் தகப்பனாருடன் பிறந்தவர் என் பெரியப்பா மட்டும்தான். தாவா சொத்துக்கள் என் பாட்டனாரின் சொத்துக்கள்தான். என் பாட்டனார் இறந்தபிறகு தாவா சொத்துக்கள் என் தகப்பனாருக்கும், என் பெரியப்பாவிற்கும் போய் சேர்ந்தது என்றால் சரிதான். என் பாட்டனார் எந்த ஆண்டு இறந்தார் என்று தெரியாது. என் பெரியப்பா எந்த ஆண்டு இறந்தார் என்று தெரியாது. என் தகப்பனார் 17.06.1993 ல் இறந்தார். என் தகப்பனாரும், பெரியப்பாவும் எந்த ஆண்டு சொத்துக்களை பிரித்துக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. என் பாட்டனார் இறந்தவுடன் பிரித்துக் கொண்டதாக என் தகப்பனார் சொன்னார். எந்த எந்த சொத்தை யார் யாருக்கு பிரித்துக் கொடுத்ததாக என் தகப்பனார் சொன்னார் என்றால் எனக்குத் தெரியாது. எந்த எந்த புல எண்ணில் என் பெரியப்பாவிற்கு சொத்து ஒதுக்கப்பட்டது என்று என் தகப்பனார் சொன்னார் என்றால் புல எண்ணை சொல்லவில்லை. தாவா சொத்து உள்ள கிராமத்தில்தான் என் பெரியப்பாவிற்கும் சொத்துக்களை ஒதுக்கினார்கள். என் பெரியப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் சுமார் 2 ஏக்கர் இருக்கும். என் பெரியப்பாவிற்கு சொத்திற்கு பதிலாக பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் என் தகப்பனார் என் பெரியப்பாவிற்கு பணம் கொடுத்ததாக சொன்னார்கள். என் பெரியப்பாவின் பாகத்திற்கு ஈடான பணத்தை என் தகப்பனார் என் பெரியப்பாவிற்கு கொடுத்து என் பெரியப்பா பாகத்தை என் தகப்பனார் எடுத்துக் கொண்டார். அதனால் என் பெரியப்பாவின் பாகத்திற்கு எந்த ஒரு அசையா சொத்தும்

கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். என் பெரியப்பாவிற்கு என் தகப்பனார் பணம் கொடுத்ததாக காட்ட ஆவணமில்லை. என் பெரியப்பாவிடம் என் தகப்பனார் பணம் கொடுக்கவில்லை என்றால் சொத்தில் பாகம் கொடுப்பதுதான் நியாயம் என்றால் சரிதான். வாதிகள் என் தகப்பனாருக்கும், பெரியப்பாவிற்கும் பாகம் ஏற்படவில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என் பெரியப்பாவிற்கு வாதிகள் இரண்டாம் தாரத்தின் பிள்ளைகள் என்றும், முதல் தாரத்தின் பிள்ளைகள் இருப்பதாகவும் அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று எதிர் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரிதான். வாதிகள் என் பெரியப்பாவின் வாரிசுகள் என்பதால் தாவா சொத்தில் வாதிகளுக்கு பாதி பாகம் உள்ளது என்றால் சரியல்ல. ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல. வாதிகளுக்கு பாகப்பிரிவினை கிடைத்துவிடக் கூடாது என்பதற்காக பொய்யான எதிர்வழக்காடுகின்றேன் என்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.